## நெழுவ பிரதேச சபை

## காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 20 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 07 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 29 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நெழுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 06 வருடங்களுக்கு முன்னர் இருந்து முன் கொண்டு வரப்படும் ரூபா 104,338 இற்கான இனங்காணப்படாத வருமான மீதியை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமல் பொறுப்புக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக ''வீட்டுக்கு வீடு – கிராமத்துக்கு கிராமம்'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 14 நிர்மாண வேலைகளில் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 12,160,578 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,248,412 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவு ரூபா 1,912,166 தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 45,270 தொகை பெறுமதியான பொறியும் பொறித்தொகுதியும் ரூபா 44,300 தொகை பெறுமதியான தளபாட உபகரணங்கள் மற்றும் ரூபா 84,700 தொகை செலவு மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சிறுவர் பூங்காவின் காவல் அறை என்பவற்றை மூலதனப்படுத்தாமையால் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகைக் கணக்கு ரூபா 174,270 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டு தொடர்பாக 06 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த மற்றும் செலவிடப்பட்டிருந்த ரூபா 3,106,181 தொகை நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டின் போது மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவுகள் என காட்டப்பட்டிருந்தமையால் அதே தொகையால் மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவுகள் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாண்வாண்டின் போது நூலகத்திற்காக ரூபா 81,000 தொகைக்கான புத்தகங்கள் கிடைத்திருந்ததுடன், ரூபா 52,975 இற்கான புத்தகங்கள் மாத்திரம் மூலதனப்படுத்தியிருந்ததால் ரூபா 28,025 வீதம் நூலகப் புத்தகக் கணக்கு மீதி மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்கு மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பிரதான பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக மூலதனச் செலவுகள் (309) ரூபா 29,282,777 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 29,781,643 என காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 498,866 இனால் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவு மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) பிரதான பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானங்கள் (1.6) ரூபா 1,453,416 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,605,868 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 152,452 இனால் மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானங்கள் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

1.3.3 இணக்கஞ் செய்யப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

(அ) 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேட்டின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 342,065 வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 2,268,263 இற்கான கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளுடன் சமப்படுத்தியிருக்காமையால் துணைப் பதிவேடுகள் மீதிகளுடன் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது.

1.3.4 தொங்கல் கணக்குகள்

----------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 72,839 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 75,904,814 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் வங்கிக் கணக்குகளின் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 3,616,104 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 613,519 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------

2.2.2 ஏக்கர் வரி

----------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,612 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 257,925 இற்கான வாடகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

----------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 35,700 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 129,750 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,428,458 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 182 இன் பிரகாரம் ஏதேனும் ஒரு நபரிடம் பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஏதேனும் பணத் தொகையொன்று மொத்தமாக அல்லது அதில் ஒரு பகுதி பிரேரணை ஆமோதிப்பின் மூலம் பிரதேச சபை ஒன்றினால் கைவிடப்பட இயலும் எனவும், ரூபா ஐம்பதை மிகைக்கும் தொகை ஒன்றினை கைவிடுவதற்காக அதற்கான பிரரேரணை ஆமோதிப்பினை அமைச்சரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டிருந்த போதிலும், சபையின் பிரேரணை ஆமோதனை ஒன்று இன்றி மற்றும் அமைச்சரின் அங்கீகாரம் இன்றி நெழுவ வர்த்தக தொடர் கட்டிடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ள 03 கடைகளில் இருந்து ரூபா 8,103,028 இற்கான வாடகை பதிவழிக்கப்பட்டுள்ளது.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

--------------------------------------------------------

1988 இன் 74 இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட் 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் சட்டத்தின் தேவைக்கு ஏற்ப 2013 மற்றும் 2014 ஆண்டுகளுக்காக 03 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிடும் கூற்று கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 13 திகதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

சபையில் கடமையாற்றும் 10 ஊழியர்கள்/ அலுவலர்களிடம் (மாற்றம் பெற்றுள்ள/ ஓய்வு பெற்றுள்ள/ சேவையை விட்டுச் சென்றுள்ள) அறவிடப்பட வேண்டிய ரூபா 28,755 இற்கான தொகை ஒன்று 02 வருடங்களை மிகைத்த காலம் முதல் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்டது.

3.4 வாகன நிருவாகம்

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 1645(அ) இன் பிரகாரம் வாகனங்களுக்காக சம்பவக் குறிப்பேடு பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்களின் மூலம் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டின் போது எரிபொருள் கட்டளைகள் மூலம் ரூபா 977,055 எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்திருந்த போதிலும், ஓட்ட அட்டவணைகள் பேணப்படாமையால் அவ் எரிபொருள் குறிப்பிட்ட வாகனத்திற்கு பயன்படுத்தப்பட்டன எனவும் அவை ஓட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டமையும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) எரிபொருள் கொள்வனவுகளுக்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து பில்பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் எனினும் சபையினால் இலங்கை எண்ணை நிரப்பு நிலையங்களுக்கு சமர்ப்பித்திருந்த எரிபொருள் கட்டளைகளுக்கு பில்பத்திரம் வழங்கியிருக்காத போதிலும் எரிபொருள் செலவு தீர்க்கப்பட்டிருந்தது.

3.5 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-----------------------------------------------------

ரூபா 250,000 பெறுமதியான கைடிரக்டர் ஒன்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2008 ஜனவரி 11 திகதி சபைக்கு நன்கொடை ஒன்றாக வழங்கியிருந்தது.

2015 ஆகஸ்ட் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது இந்த வாகனம் ஓட்ட நிலையில் காணப்படாத சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்ததெனவும், ஓட்ட நிலையில் காணப்படாமையால் டயர்களும் பயன்படுத்த முடியாத நிலையை அடைந்துள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது.

3.6 முறை சாரா கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

2014 ஆண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் திருத்த வேலைகள் மற்றும் பொருத்துவது தொடர்பாக காவலாளி ஒருவர் மற்றும் அலுவலக தொழிலாளர் ஒருவருக்காக ரூபா 159,650 தொகையும் சம்பளமாக ரூபா 452,985 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையின் காவலாளி மற்றும் அலுவலக தொழிலாளர் ஒரே சந்தர்ப்பத்தில் இரண்டு வகையான சேவைகளுக்காக படிகள் பெறப்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

--------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்